**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.963/2022**
**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சண்முகம்** | Caste | : |
| Husband Name/ Father Name | : **ராமன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(29.01.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது கப்பலூரில் குடியிருந்து வருகிறேன். நான் MSS நிறுவனத்தில் மேலாளராக பணி செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அவர் எங்கள் நிறுவனத்தில் பணிபுரிந்தவர் ஆவார். கடந்த 23.09.2021ம் தேதி எங்கள் நிறுவனத்தில் செக்யூரிட்டியாக பணிபுரிந்தவருக்கு எங்கள் நிறுவனத்தின் குடோனில் விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் சென்று பார்த்த போது அவரை 108 ஆம்புலன்சில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 23.09.2021ம் தேதி நானும் சூப்பர் வைசர் பாலமுருகன் என்பவரும் இரவு 8 மணியளவில் மழை பெய்து கொண்டிருந்தபோது நிறுவனத்தில் இருந்தோம் என்றும் அப்போது செக்யூரிட்டி மனோகரன் மழை நீர் செல்வதை சரி செய்துகொண்டிருந்த போது எங்கள் நிறுவனத்திற்கு சொந்தமான TN 93 D7347 என்ற பதிவு எண்

கொண்ட பொலிரோ பிக் அப் லோடு வண்டியை எதிரி அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து செக்யூரிட்டி மனோகரன் மீது விபத்தை ஏற்படுத்தினார் என்றும் வலதுபக்க தலையில் பலத்த இரத்தக்காயம் வந்து கொண்டிருந்த நிலையில் மனோகரனை நானும் பாலா என்ற பாலமுருகன் என்பவரும் 108 ஆம்புலன்சு மூலம் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும் இதுசம்பந்தமாக அவர் குடும்பத்திற்கு தகவல் சொன்னோம் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரி எங்கள் நிறுவனத்தில் பணிபுரிபவர் என்பதாலும் அவர் கேட்டுக் கொண்டதன் பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.963/2022**
**Prosecution Witnesses : 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலா என்ற பாலமுருகன் | Caste | : |
| Husband Name/ Father Name | : முத்திருளன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(29.01.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருநகரில் குடியிருந்து வருகிறேன். நான் MSS நிறுவனத்தில் டெலிவரி புக்கிங் பணி செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அவர் எங்கள் நிறுவனத்தில் ஓட்டுனராக பணிபுரிந்தவர் ஆவார். கடந்த 23.09.2021ம் தேதி எங்கள் நிறுவனத்தில் செக்யூரிட்டியாக பணிபுரிந்தவருக்கு எங்கள் நிறுவனத்தின் குடோனுக்குள் கிராசிங் பாய்ன்ட்டில் விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் சென்று பார்த்த போது அவரை 108 ஆம்புலன்சில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 23.09.2021ம் தேதி நானும் மேலாளர் சண்முகம் என்பவரும் இரவு 8 மணியளவில் மழை பெய்து கொண்டிருந்தபோது நிறுவனத்தில் இருந்தோம் என்றும் அப்போது செக்யூரிட்டி மனோகரன் மழை நீர் செல்வதை சரி செய்து கொண்டிருந்த

போது எங்கள் நிறுவனத்திற்கு சொந்தமான TN 93 D7347 என்ற பதிவு எண் கொண்ட பொலிரோ பிக் அப் லோடு வண்டியை எதிரி அதிவேகமாகவும் கவ னக்குறைவாகவும் ஓட்டி வந்து செக்யூரிட்டி மனோகரன் மீது விபத்தை ஏற்படுத்தினார் என்றும் வலதுபக்க தலையில் பலத்த இரத்தக்காயம் வந்து கொண்டிருந்த நிலையில் மனோகரனை நானும் சண்முகம் என்பவரும் 108 ஆம்புலன்சு மூலம் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும் இதுசம்பந்தமாக அவர் குடும்பத்திற்கு தகவல் சொன்னோம் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரி எங்கள் நிறுவனத்தில் பணிபுரிபவர் என்பதாலும் அவர் கேட்டுக் கொண்டதன் பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**இல்லை